மில்க்வைற் செய்தி
Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ மாசி 1978 ★ இதழ் - 26

# இலக்கிய இலக்கண மேதை

சென்ற நூற்றுண்டில் இலக்கண மேதை முருகேச பண்டிதரைப் போல இந்த நூற்றுண்டில் புகழ் பெற்றவர் வித்துவான் சுப்பையபிள்ளை. குறுமுனி போன்ற அவர் சிதம்பரம் நாவலர் பாடசாலையில் வேற்பிள்ளை உபாத்தியாயரிடம் முறையாகக் கற்று, அன்னுரால் வெகுவாகப் பாராட்டப் பெற்றவர். சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் 1922 ஆம் ஆண்டில் மறைந்தபோது அவரின் இடத்தை நிரப்புவதற்குத் தகுதியானவர் என்று அறிவாளிகளால் கணிக்கப்பெற்று மதிக்கப்பெற்றவர்.



22-1-1900 — 22.1-1978

தஞ்சைவாணன் கோவைக்குச் சொக்கப்ப நாவலர் எழுதிய உரையைப் பரிசிலனை செய்து அருமையாக வெளியிடச் செய்த இவரின் ஆற்றலைத் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றியது. முன்னொரு சமயம் பாலபாட வரிசைகள் சிறப்புற்றிருக்கக் காரணமாய் இருந்தவர் பிள்ளையவர்கள். பிழை திருத்துதல், புறூவ் பார்த்தல் முதலிய வேலைகளை மிக நுணுக்கமாகச் செய்பவர். எந்த நூலுக்கும் ஆணித்தரமான உரை எழுதவல்லவர். தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து, இலக்கண விளக்கச் சூருவளி, யாப்பு, தண்டி, மாறனலங்காரம், இறையனுர் களவியல், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பா, பன்னிரு பாட்டியல், தருக்க சங்கிரகம், வடமொழி தென்மொழிப் புணர்ச்சி விதிகள் எவை வேண்டுமானுலும் நின்றவிடத்தில் நினைத்த நேரத்தில் மடை திறந்தாற்போல் விளக்க வல்ல வித்துவான் - ஒரு தனிப் பிறவி.

அன்பு, நேர்மை, அடக்கம், ஒழுக்கம், தமிழ்ப்பண்பு, தயை, தாய்மை உணர்ச்சிமிக்க ஒருவர் பல்லாயிரவர் உள்ளங்களில் பதிந்து நிற்பவர். குழந்தையுள்ளம் கொண்ட வித்துவானிடம், வித்துவக் காய்ச்சல், மிடுக்கு, கர்வம், மண்டை வீக்கம், நீரேத்தம் அணுகியதில்லை. பிள்ளாய், பிள்ளாய் என்று அன்பொழுக மாணவரை நோக்கும் மனுேபாவம் முற்றறிவுபெற்ற முனிவர்களுக்கே அன்றி மனிதரிடம் அரிதினும் அரிது.

மகாமேதையும் மகானுமாய் எங்கள் மத்தியில் ஐம்பத்தைந்து ஆண்டுக் காலம் வாழ்ந்த பெரியார் தோன்றிய நாளிலே மறைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 22-1-1900 — 22-1-1978 சிதம்பரம் நாவலர் பாடசாலை, மதுரைத் தமிழ்ச்சங்கம், அண்ணுமலைப் பல்கலைக் கழகம், சென்னைப்பல்கலைக்கழகம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், மேலைச்சிவபுரி சன்மார்க்கசங்கம், யாழ்ப்பாண

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

★ கடவுளிடம் தன்னை ஒப்படைக்கிறவன் பாக்கியவான் ★

உ

# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

### திருப்பெருவேளூர் – திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

மறையணி நாவினுனை மறப்பிலார் மனத்துளானைக்
கறையணி கண்டன்றன்னைக் கனலெரி யாடினுனைப்
பிறையணி சடையினுனைப் பெருவேளூர் பேணினுனை
நறையணி மலர்கள்தூவி நாடொறும் வணங்குவேனே.

வேதங்களை அணிந்த நாவினையுடையவரும், அவரை மறவாது வணங்குபவர் மனத்துள் நிற்பவரும், ஆலகால விடத்தால் கறுத்த கண்டத்தையுடையவரும், திருக் கரத்திலே நெருப்பினை ஏந்தி நடனம் புரிபவரும், சடையிலே இளம்பிறையைச் சூடியவரும், பெருவேளூர் என்னும் திருத்தலத்திலே எழுந்தருளியுள்ளவருமான சிவபெருமானை அடியேன் நாள்தோறும் தேனின் வாசனை பொருந்திய மலர்கள் தூவி வழிபடுவேனுவேன்.

இத் திருப்பதிகத்தில் சிவபெருமான் உலகுக்கெல்லாம் நாதன் எனவும், அவர் பரமயோகி எனவும், குமரக் கடவுளின் தந்தை எனவும், உமாதேவியாரைப் பாகத்தில் கொண்டவர் என்றும், நமது பிறவிநோயை மாற்றுபவர் என்றும், மழுவாயுதம் உடையவர் என்றும், ஆனைத் தோல் போர்த்தவர் என்றும், மோட்சந் தருபவர் என்றும், நாகத்தைக் கச்சையாகக் கட்டியவர் என்றும், பிச்சை ஏற்றுண்பவர் என்றும், சித்தராய் எழுந்தருளி அடியவர் நோய் தீர்ப்பவர் என்றும், தலைமாலை தரித்தவர் என்றும், பெரிய ஞானி என்றும், கொன்றை மாலையைத் தரித்தவர் என்றும், புறச்சமயத்தவரையும் ஏற்பவர் என்றும், இராவணனுக்கு அருள்புரிந்தவர் என்றும் பாடுவர்.




## பொருட்பால் – அங்கவியல்

### சொல்வன்மை

அரசர்க்குக் கல்வி இன்றியமையாதது போல அமைச்சர்க்குச் சொல்வன்மை இன்றியமையாதது. அஃதாவது பயனுள்ள சொற்களைக் கூறுதலாம்.

**சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது.**

தான் கருதியவற்றைச் சொற்சோர்வு இன்றி, சபைக்கு அஞ்சாது கூறக்கூடிய சொல்வன்மையுடைய மந்திரியை எவராலும் எதிர்த்து வெல்லமுடியாது.

It is impossible for anyone to c onquer him who possesses power of speech, and is neither faulty nor timid.

---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இலக்கிய......

ஆரிய திராவிட சங்கம், இலங்கைப்பல்கலைக்கழகம், இலங்கை சாகித்திய மண்டலம், யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலை முதலிய நிறுவனங்கள் வித்துவான் அவர்களின் மேதாவிலாசத்தை நன்கறிவர். இலங்கைச் சாகித்திய மண்டலத்தில் மிகப்பெரிய கௌரவம் அளிக்கப்பெற்ற முதல்த் தமிழ்ப்பெருமகனுர் வித்துவானுவார். மில்க் வைற் தொழிலதிபர் வித்துவான் அவர்களை மிகவும் கௌரவிப்பதோடு அன்னுரை வணங்கி வாழ்த்தப்பெறுபவர். அவரைக் கொண்டு வள்ளுவர் சிலையையும் திரைநீக்கஞ் செய்து வைத்தார். அவர் நினைவு எம்மனோர் நெஞ்சில் நிறைவு பெற்று நிலவும். அவர் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

---

## வன்னியிலிருந்து வந்த வாழ்த்தொலி

போற்றும் அறிவொளி பூத்தமலர்
பொன்னும் விழாவின் சிறப்புமலர்
சாற்று பெரியார் தகமையெலாம்
தரணி தழைக்கத் தந்தமலர்
ஏற்று நீதி நெறிபலவும்
இதழ்கள் தோறும் மணக்குமலர்
ஆற்று தொழிலக ஆண்டுமலர்
அடியேன் பெற்றேன் பேறெனவே!

— சி. கார்த்திகேசு கருவேலன்கண்டல்.

---


## மில்க்வைற் செய்தி


மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் ,, 2, மெடிக்கேட்டட் ,, 2
சலவைப்பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் - த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


**ஈசுவரன் கிருபை மனிதனின் பாபத்தைப் பொசுக்கும்**

## சுவாமி சச்சிதானந்தர் வருகை



குபேரசம்பத்துள்ள கோடீஸ்வரர் வாழுகின்ற அமெரிக்காவில் விஞ்ஞான மேம்பாட்டுக்கும் குறைவில்லை! சந்திரனில் இறங்கி உலாவி மண்ணும் கல்லும் கொண்டு வருமளவில் அங்கே விஞ்ஞான வசதிகள் முன்னேறியுள்ளன. ஆனால் மெய்ஞ்ஞானத்துறையில் பரிபக்குவம் அடைபவரின் எண்ணிக்கை வெகு குறைவாகவே இருக்கிறது. அமைதியையும் மனச் சாந்தியையும் நாடும் சிலர் திடீர் அமைதி பெறுவதற்குக் குளிகைகளை விழுங்குவதும், இலை வகைகளை புகைப்பதும் வழக்கமாகவும் உள்ளன.

இந்நிலையில் சுவாமி சச்சிதானந்தர் அங்குள்ளவரிடம் யோகநெறியைப் பழக்கி ஐந்துலட்சம் பேரை நல்வழிப் படுத்தியுள்ளார். அவரிடம் அணுக்கத் தொண்டராக நெருங்கிப்பழகும் அமெரிக்கர் சிலர் அர்த்தமுள்ள இந்து மதத்தை அநுட்டித்து அருமையான பெயர்களைப் புனைந்து வாழ்கின்றார்கள். சேவை செய்கிறார்கள். புனிதமாக வாழ்கின்றார்கள். தூயவுணவும் தூயவுடையும் தூயசிந்தையும் உடையவர்களாய்த் திருக்கோயில்களில் வழிபாடு செய்கிறார்கள்.

சைவர்களாகி வாழும் அமெரிக்கர் சிலர் தமக்குச் சிறப்பான பெயர்களைப் பூண்டுள்ளார்கள். சத்தியம், ஜோதி, பாலர், புருஷா, பிரகலாதா, காந்தி, ஆனந்தா, ஈஸ்வரா என்பன ஆண்களிடையேயும்; விமலா, சாந்தி, தர்மினி, கருணா என்பன பெண்களிடையேயும் வழங்கும் பெயர்களாகும். பக்குவம் வாய்ந்த பெரியார்கள் சுவாமிப் பட்டம்பெற்று அமிர்தானந்தா, சர்வானந்தா முதலிய திருநாமங்களால் வழங்குகிறார்கள். மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

சுவாமி சச்சிதானந்தரிடம் யோகம் பயின்ற தொழிலதிபர் கனகராசா அவர்களை அமெரிக்கர் தம் சகோதரர் எனப் பணிந்து அன்புரிமை கொண்டாடி உரையாடிச் சைவம்பரப்பும் நூல்களைப் பெற்றுப்போனார்கள். ★

## தொய்வுக்காரர் செய்துபாருங்கள்!

— சுவாமி சிவாநந்தர் —

உருசியானவை, எண்ணெய் பெய்தவை ஆகா.
அவசரமாக உண்ணல், அதிகமாக உண்ணல் ஆகா.
மன அதிர்ச்சி, கவலையின் போது உண்ணல் ஆகா.
நன்றாக மென்று தின்று அதிக வெந்நீர் பருகுதல் நன்று.
இடையிடை உபவாசம் இருத்தல் நன்று.
புதிய பச்சிலைகளின் சாறுகளைப் பிழிந்து பருகுதல் நன்று.
பழரசம், தேன், காய்கறிச் சூப் நல்லவை.
தன்னடக்கம் வீரிய அடக்கம் அவசியம்.
மாப்பொருள், சர்க்கரை, புகையிலை ஆகா.
மதிய உணவு மிதமாகவும், மாலையுணவு பாலாகவும் [அருந்துக.
ஆழ்ந்து மூச்சுவிடுக. காலை மாலை உலாவுக.
காலை மாலை வெயிலில் உலாவுதல் நன்று.
கடற்கரை, நதிக்கரை, மலையடிவாரம் நன்று.
மார்பின் மீது வேண்டும் போது ஒத்தடம் நன்று.
மலச்சிக்கல் இல்லாது பார்த்தல் நன்று.
உணர்ச்சிகளுக்கு அடிமையாதலாகாது.
உணவுத் தூய்மை, மனத்தூய்மை அவசியம்.
வேகாத உணவும் புளிப்பான உணவும் வேண்டா.
இட்ட தெய்வத்தின் திருநாமத்தை ஓதுக. ★

## வாசிப்பதால்...

வாசிப்பதால் மனிதன் அறிவு பெறுகிறான். பூரணமாகிறான். ஓய்வு நேரத்தை நல்லவழியில் கழிக்கிறான். வாசிக்கும்போது தன் குணநடையில் திருத்தமடைகிறான். பாடசாலையில் பெறமுடியாததை நூல்களில் பெறுகிறான். வாசிக்கும் மனத்துக்குப் புத்தகங்கள் யன்னல்கள் போன்றவை. காற்றும் வெளிச்சமுந் தரும் யன்னல்களிலும் நூல்கள் மேலானவை. அமெரிக்கர், ருசியர், பிரித்தானியர், யப்பானியர் அதிகமாக வாசிக்கிறார்கள்.

இந்தியாவில் 46,000 அச்சுக்கூடங்கள் உள்ளன. அறுபதுகோடி மக்களுக்கு இவை போதா என்கிறார்கள். இந்தியா ஆண்டுதோறும் பத்துக்கோடி ரூபா பெறுமதியான நூல்களை இறக்குமதி செய்கின்றது.


மில்க்வைற் சவர்க்கார மேலுறைகள் எவையாயினும் நீங்கள் அனுப்பி வாசிப்பதற்கு நாங்கள் வெளியிட்ட நல்ல நூல்களைப் பெறலாம்.

மில்க்வைற்,
தபாற்பெட்டி 77,
யாழ்ப்பாணம்

## ஈயம் பூசும் இடம்

எங்கள் யோககுருநாதன் ஒருநாள் ''ஈயம் எங்கே காணும் பூசுவது?'' என்று கேட்டார். அதற்குமேல் அவர் ஒன்றும் கேட்கவில்லை. விளக்கவும் இல்லை. நாம் உடல், உடை, உறைவிடம் ஆகியவற்றைச் சுத்தமாக்கப் படாதபாடு படுகிறோம். ஆனால் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதையே சுவாமிகள் கருதினார்கள். ★

**மூர்க்கத்தனம் உள்ளவனுக்கு முன்னேற்றம் இல்லை**



# சிவானந்தர் வழியிற் சிதானந்தர்

ஒருநாள் நாம் எல்லோரும் இந்த உலகத்தை விட்டுப் போகவேண்டி வரும். அப்போது நாம் எடுத்துக் கொண்டு போவதற்கு எந்தச் செல்வமும் பயன்படமாட்டா. ஆனல் சேவை, தியாகம், வழிபாடு, பக்தி, தர்மம் முதலிய சாசுவதமான செல்வத்தை எவரும் கொள்ளையடிக்க முடியாது. இது எமக்குப்பின் வந்துதவும்.

பணிவாக இரு. ஒழுக்கமாக இரு. அகங்காரத்தை விட்டொழி. சத்தியம் பேசு. குற்றங்காணுவதை ஒழித்துக் கட்டு. நாம ரூபத்தைத் தியாகஞ் செய். தத்துவத்தைத் தெரிந்துகொள். நித்தியசுத்தன், சர்வசக்திமான், இறப்பிறப்பில்லாதவன், அசலன், அனந்தன், பூரணன் ஆக இருக்கின்ற இறைவனையே சிந்தித்துப் பழகு. பார்வையை மாற்று.

---

# சைவப் பெரியார் சபாபதிப்பிள்ளை

கரணவாய் ஊரைச்சேர்ந்த அநுபவமுள்ள ஆசிரியர் சபாபதிப்பிள்ளை அடக்கமே உருவாயமைந்த அறிஞர். திருமுறைகள் சாத்திரங்களில் நிரம்பிய தேர்ச்சி பெற்ற பழுத்த பழமாய் உலாவிய பெரியார் நல்லையாதீனம் வில்லூன்றிப் பிள்ளையார் கோயில், கொட்டடி ஆலயம், மாவிட்டபுரம் முதலிய திருப்பதிகளில் உலாவி வந்தவர். என்றும் பணிவுடன் பணி செய்தலையே கடமையாகவும் மூச்சாகவும் கொண்டவர். தென்னிலங்கையில் பல்லாண்டு பணிபுரிந்தவர். தமிழ் நாட்டில் தலயாத்திரை செய்து ஞானம் அறிந்தவர். என்ருவது தனக்கெல்லாம் தெரியும் என்றோ தம்மிடம் பிரம்மதேஜஸ் உண்டென்றோ வாய் திறந்து கூருதவர். தமது முதுமைப் பராயத்திலும் சிவப் பணி செய்தவரே நின்ருற்போல் மாரடைப்பால் இறுதி மூச்சை விட்டவர். அவரின் இறுதிச்சடங்குகள் கரணவாயில் ஆகமம் வல்ல குருக்கள்மாரால் 16-1-78 சோமவாரத்தன்று சிறப்பாகச் செய்யப்பட்டன. நல்லையாதீன இளவரசு, மில்க்வைற் தொழிலதிபர், விபுலானந்த அச்சக முதல்வர், நல்லூர் ஆ. துரைராசசிங்கம், நல்லை ஒதுவார் முதலானேர் அன்னாரின் சேவையைப் பாராட்டி அவரின் ஆன்ம சாந்திக்காக இரங்கினர். வரணிப் பெரிய குருக்கள் அவரின் பெருந்தன்மையைப் பெரிதும் போற்றினர். ★

# பஞ்சாங்கம்

வருடம் என்னும் புருடனுக்கு காலதேவனுக்குப் பன்னிரண்டு மாதங்களும் கை கால் முதலிய அவயவங்களாகவும் உறுப்புக்களாகவும் உள்ளன என்பர். நவ நாயகர் என்னும் ஒன்பது கிரகங்களும் நம்மை ஆளும் ஆள்பதிகள்.

ஒவ்வொரு ஆண்டுக்குமுரிய திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்து அங்கங்களைக் கூறுவது பஞ்சாங்கம் எனப்படும். இவற்றுள் திதி நன்மையை விருத்திசெய்வது. ஆயுளை வளர்ப்பது வாரம். நட்சத்திரம் பாபத்தைப் போக்குவது. யோகம் ரோகங்களை நீக்குவது கரணம் வெற்றியைத் தருவது. இவற்றைக் கொண்டு நமது பலனை அறிந்து கொள்ளலாம்.

நாம் செய்யும் புண்ணிய பாவங்கள் எங்காவது போவதில்லை. அவை சூக்குமமாக ஆகாயத்தில் அமைந்திருக்கும். எப்போதாவது அவற்றின் பலன்களை நாம் அநுபவித்தே தீரவேண்டும். நமது பிறப்பு இறப்பு ஆகியவேளைகளில் அவை பயன்தருகின்றன. ★

---

# யோகசுவாமிகள்

எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீறணிக
பழுதிலெந் தெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட்ட ரற்றுக
அன்னையப்பர் அடியிணை வணங்குக
தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகம் ஆகுக
கண்ணைப் போலக் காக்க அறத்தை
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்க
கையும் மெய்யும் கருத்திற் கிசைக
அழுக்காறு கோபம் அவா ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக்கள் தம்மை
ஒருபோதும் மறவா துறவு கொள்ளுக
கருவினில் வாராக் காரணங் காண்க
தன்னையறிக தானே யாகுக
மின்னையொத்த வாழ்வை வெறுக்க
வறுமை யெந்துழி மனம் தளரற்க
மறுமை இன்பம் மறவாது நாடுக
அடியார் தங்கள் அடியிணை மலர்க்கீழ்
குடியாய் வாழ்க குறைவெலாந் தீர்க
ஈசன் அடியிணை ஏற்றி ஏற்றி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
மத்தன் இவனென மண்ணவர் பேசவும்
சித்தன் இவனெனத் தேவர் கொண்டாடவும்
இவ்வண்ணம்
ஒத்தன ஒத்தன ஊரவர் பேசிடச்
சித்தர் தெளிந்து சிவாய நமவென
நின்று மிருந்துங் கிடந்தும் நினைந்து
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிந்து
நன்மை தீமை நாடா தொருவி
அன்னை போல அன்பிற் சிறந்து
பின்னையொன்றும் பேசா தடங்கி
என்றும் வாழ்ந்தினி திருத்தல் இன்பமென். ★

---

**கொள்கையை மாற்றலாம் கோட்பாட்டை மாற்றமுடியாது**

# இஞ்சி

இஞ்சியின் ஏற்றம் அதிகம். இது மருந்தாகவும், சமையல் அறையில் சரக்காகவும் எமக்குப் பயன்படுகிறது. இஞ்சி ஒரு செடியின் கிழங்கு. இஞ்சி என்னும் எங்கள் மொழி ஆங்கிலத்திலேயும் இடம்பெற்று எமக்கும் எம் மொழிக்கும் ஏற்றந்தந்துள்ளது. காலையில் எழுந்தவுடன் இஞ்சியும் கடுப்பகலில் இஞ்சியின் மறுபிறப்பான சுக்கும், மாலையில் கடுக்காயும் உட்கொண்டவர் கோலையூன்றிக் குனிந்து நடக்கும் கிழவராயினும், அதனை வீசிவிட்டுக் குமரனாகிப் பீடுநடை நடப்பர் என்பது அனுபவத்தை ஒட்டிய பாட்டு.

இஞ்சிக்குப் பல பெயர்கள் உண்டு. அவை அல்லம், அனுபகம், அத்திரதம், சஞ்சீவி, நமருப்பு, பச்சைக் கொம்பு என்பனவும் பிறவுமாம்.

இஞ்சி சமிபாட்டுக் குறையைப் போக்குவது. உடம்பில் வேண்டியளவு சூடுண்டாக்குவது. திமிர்வாதம், சந்து வாதம் இவற்றைப்போக்குவது. நாவுக்கு உருசி தருவது வாயுவைத்தணித்து, வயிற்றுப்பொருமல், வயிற்றுவலி, மெலிவு, தளர்ச்சி, திமிர், விறைப்பு இவற்றை நீக்குவது.

### சமையலில்........

மோர், தயிர், பச்சடிகளிலும், சாம்பார், வடை முதலியவற்றிலும் இஞ்சி ஏற்றமுள்ள இடம்பெறுவது வழக்கம்.

### உபயோகம்

இஞ்சியின் மேல்த்தோலையும், இஞ்சியில் உள்ள சுண்ணாம்புத் தன்மையையும் நீக்குதல் வேண்டும். ஆகவே அதன் தோலை நீக்கிவிட்டு அரைத்து நீரிற் கரைத்துத் தெளியவிட்டு தெளிவையே உபயோகித்தல் முறை. அடியில் உறையும் சுண்ணாம்பு ஆகாதது.

இஞ்சியைச் சர்பத்திலும், சோடாப்பானகத்திலும் கலந்து சுவை யூட்டிக்கொள்கிறார்கள். இஞ்சி சர்பத் செய்வது சுலபம். இஞ்சிச்சாற்றுடன் எலுமிச்சம்பழச்சாறும் சீனியும் கலந்து காய்ச்சிப் பதமாகும்போது தேன் விட்டு இறக்கி ஆறியபின் போத்தலில் அடைத்துவைத்து வேண்டும்போது வெந்நீர் பெருக்கிப் பருகிக்கொள்ளலாம். இதனால் ஈரல் உற்சாகப்படுதலும், பசி உண்டாதலும், வாந்திக் கஷ்டம் நீங்குதலும் பயனாகும். இஞ்சியைத் தட்டிப் பிழிந்து மோரிலிட்டுப் பருகுதலும் பெரு நன்மை பயப்பதாகும், குழந்தைகளுக்கு இஞ்சியைப்போல் உடன் குணமளிக்கும் கை மருந்து உலகில் வேறெதுவும் இல்லை. நெஞ்சுச் சளி முதலிய கபக் கோளாறுகளுக்கு இஞ்சிச்சுரசம் எடுத்துக் கொதிப்பித்து தேன் கூட்டிக் காலை மாலை கொடுத்துவரக் கபமும் நீங்கும், காய்ச்சல் இருப்பின் அதுவும் போகும். இன்னும் இருதயப் பலவீனமானவர்களுக்கும் இது நல்ல மருந்தாகும்.

இஞ்சிச்சாறும் மாதுளம் பூச்சாறும் தேனும் கலந்து உட்கொண்டால் இருமல் குணமாகும். அல்லது இஞ்சிச்சாறும் ஈரவெங்காயச்சாறும் எலுமிச்சம்பழச்சாறும் உட்கொண்டால் இருமல் தணியும். ★

# அருள் விருந்து

(ஆதாரம் - தர்மசக்கரம்)

1. நான் என்பது அகன்றால் தெய்வம் எஞ்சியிருக்கும்.
2. சான்றோர் எளிமை வடிவாய் இருப்பர்.
3. வாழ்வைப் பெருமைப்படுத்துவது கடமை.
4. மக்களின் பண்பாடே நாட்டின் செல்வம்.
5. பிறர்மீது குற்றங் காண்பவனும் குற்றவாளி.
6. அடிபணியப் பழகினால் ஆளப்பழகலாம்.
7. தன்னைத் திருத்தியவனே உலகைத் திருத்துவான்.
8. உள்ளத்தின் அமைதியை ஆரவாரம் அசைக்காது.
9. பக்தர்களுள் உலக வேற்றுமைகள் கிடையா.
10. எல்லோரும் கடவுளின் குழந்தைகள்.

### மகாநாராயண உபநிஷதம்

நறு..னத்தோடு கூடியவரும் போஷித்து வளர்ப்பவருமாகிய முக்கண்ணனைப் போற்றுவோம்.

வெள்ளரிப்பழம் தனது கொடிக்காம்பிலிருந்து விலகிக் கொள்வது போன்று நாம் மரணத்தினின்று மோட்சமடைவோமாக. அமிர்தசொருபமாகிய சிவனாரிடமிருந்து நாம் விலகலாகாது.

### தம்பதிகளை வாழ்த்துகிறோம்

மில்க்வைற் தொழிலகத்தைச் சேர்ந்த மணமகன் திருநிறைசெல்வன் பி. வைரவநாதன் அவர்களையும், மணமகள் செல்வி செல்வபூரணம் அவர்களையும் அன்புடன் ஆசீர்வதிக்கிறோம்.

திருஆலவாய் — மில்க்வைற் தம்பதிகள்.



# திருமணம்

மணமகன் கோப்பாய் விவாகப் பதிவுகாரர்
சு. சுப்பிரமணியம் தம்பதிகளின் மைந்தன்
செல்வன் சு. குமாரசாமி
மணமகள் மில்க் வைற் செய்தி ஆசிரியரின்
தம்பியார் கனகசபாபதியின் புதல்வி
செல்வி க. லிங்ககுமாரி

திருமணநாள்: 10-2-78 வெள்ளி மாலை 4-30.
இடம்: மணமகள் இல்லம்.

3, அம்மன் வீதி, கந்தமடம். — தங்களை அன்புடன் அழைக்கும் செய்தி ஆசிரியர்

## சமய தத்துவங்களை விளக்குவனவே குறியீடுகள்

குமரிமுதல் காஞ்சிவரை

# திருக்கடவூர்

தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்த போது கிடைத்த அமுதத்தைத் தேவர்கள் ஒரு புனிதமான இடத்தில் அமர்ந்து உண்ணக் கருதினர். அவர்கள் இவ்விடத்தில் அமுதகடத்தை வைத்துவிட்டு நீராடி வந்து பார்த்தபோது கடம் நிலத்திலே பொருந்திவிட்டது. நிலத்தில் பொருந்திய கடம் லிங்க வடிவாயிற்று. அதில் தோன்றியவர் அமுதகடேசுவரர் ஆயினர். கடத்தினால் பெயர்பெற்ற இவ்வூர் கடவூராகித் திருக்கடவூர் எனத் தெய்வத் தன்மையுடன் விளங்குகின்றது.

இங்குள்ள இறைவி புகழ்பெற்ற அபிராமி. இங்குள்ள விநாயகருக்குக் கள்ளவாரணப் பிள்ளையார் என்பது திருநாமம். இவர் தேவர்கள் கொண்டுவந்த அமுதத்தை எடுத்து மறைத்து வைத்துவிட்டுப் பின்னர் அவர்கள் தொழுது தோப்புக்கரணம் போட்டபின் கொடுத்தார் என்பர். திருக்கடவூரின் தலவிருட்சமாய வில்வத்தில் சாதி முல்லை படர்ந்திருக்கும். இங்குள்ள தீர்த்தம் அமுதபுட்கரணி, காலதீர்த்தம் என்பனவாம். நீண்டகாலம் வாழ விரும்புவோர் இத் திருத்தலத்துக்குச் சென்று ஆயுள் விருத்திபெற ஆயுள்ஹோமஞ் செய்கிறார்கள்.

## வீரட்டானங்களில் ஒன்று

சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் செய்தவர். அன்றி எட்டு வீரச்செயல்களையும் செய்தவர். வீரச்செயல் புரிந்த இடங்கள் வீரட்டானங்கள் எனப்படுகின்றன. அவ்வெட்டுவகை வீரமும் இடங்களும் வருமாறு

1. திருக்கண்டியூர் — பிரமன் தலைகளில் ஒன்றைக் கிள்ளியமை
2. திருக்கோவலூர் — அந்தகாசுரனை அழித்தமை
3. திருவதிகை — முப்புரங்களை எரித்தமை
4. திருப்பறியலூர் — தக்கன் தலை கொய்தமை
5. திருவிற்குடி — சலந்தராசுரனை வதைத்தமை
6. திருவழுந்தூர் — கயாசுரனுடைய யானையை உரித் [தமை
7. திருக்குறுக்கை — மன்மதனை எரித்தருளியமை
8. திருக்கடவூர் — இயமனை உதைத்தருளியமை

சிவபெருமான் மார்க்கண்ட மாமுனிக்காக இயமனை உதைத்தருளிய வீரத்தையும் பின் அவனுக்கு அருள் செய்தமையையும் தேவார முதலிகள் மூவரும் போற்றிப் பதிகங்கள் பாடியுள்ளனர். கரிதரு காலனைச் சாடினானும் கடவூர்தனுள் விரிதரு தொல்புகழ் வீரட்டனல்லனே. என்பது சம்பந்த சுவாமிகள் தேவாரம். மார்க்கண்டர்க்காக அன்று காலனை உதைப்பர்போலும் கடவூர் வீரட்டனாரே என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம். கொன்றாய் காலன் உயிர் கொடுத்தாய் மறையோனுக்கு என வருவது சுந்தரமூர்த்திகள் தேவாரம்.

இயமன் மார்க்கண்டேயர் மீது வீசிய பாசக்கயிற்றின் தழும்பு திருக்கடவூர் மகாலிங்கத்தின் மீது படிந்துள்ளது. மார்க்கண்டேயருக்கு அருள்புரிவதற்கு எழுந்த சிவபெருமான் காலனை உதைத்தருளினார். அவர் கொண்ட காலசம்ஹார மூர்த்தம் தங்கக்கவசத்தால் மூடப்பட்டுள்ளது

காலசம்மார மூர்த்தம் மிகவும் பெரியது அழகானது. அழகிய மண்டபத்தில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ள இன்னொரு திருவுருவமும் லிங்கத்தினின்றே புறப்பட்டுள்ள பாவனையில் உள்ளது. வலது திருவடி பிளவுபட்ட லிங்கத்துள் இருக்கிறது. வலது திருக்கரமொன்றில் மிக நீளமான முத்தலைச் சூலம் பிடித்துள்ளார். மற்றத் திருக்கரத்தில் மழுவாயுதம் உள்ளது. இடது திருக்கரங்களில் பாசமும் தர்சனி முத்திரையும் உள்ளன. இயமன் அஞ்சி ஒதுங்கிக் கூப்பிய கைகளுடன் நிற்கிறான்.

சந்நிதிக்கு முன்பாக உள்ள மண்டபத்தைச் சங்கு மண்டபம் என்பர். இங்கே சங்காபிஷேகத்துக்கான சங்குகளை வைக்கிறார்கள். கார்த்திகை மாதச் சோமவாரங்களில் இங்கே சங்காபிஷேகங்கள் நடைபெறும் என்பர்.

இக் கோயிற் பிரகாரமொன்றில் சுற்றிவரும்போது நூற்றுக்கணக்கான லிங்கங்களைக் காணலாம் ஒவ்வொரு லிங்கத்துக்கும் ஒவ்வொரு ஈஸ்வரப் பெயர் வைத்துள்ளார்கள். ஆங்கொரு மூலையில் உள்ள லிங்கத்துக்கு மார்க்கண்டேசுவரர் என்று பெயர். இன்னோரிடத்தில் பஞ்சமுகச் சிவனார் திருவுருவம் உள்ளது. சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள் உண்டு.

இங்கேயுள்ள ஐந்து பிரகாரங்களில் இன்னோர் அழகு ஆங்காங்கே திருவிளையாடல்களைக் குறிக்கும் மூவர்ணப் படங்கள் அழகாக வரையப்பட்டுள்ளமையாகும்.

## கோபுரச் சிறப்பு

மேற்குத்திசை நோக்கிய சந்நிதியையுடைய திருக்கடவூர் கோபுரம் பெரியது கம்பீரமானது. இராஜகோபுரம் மிகவும் பெரியது. அதைவிட அடுக்கடுக்காக இன்னும் இரண்டு கோபுரங்கள் உள்ளன. கோயிலில் மிகவும் அகல நீளமான ஐந்து சுற்றுப்பிராகாரங்கள் அமைந்துள்ளன. மூன்றாவது பிராகாரத்தைக் கடந்தவுடன் மகா மண்டபத்தைக் காணலாம். மகா மண்டபத்தின் இடப்பக்கத்திலே தான் கள்ளவாரணப் பிள்ளையார் எழுந்தருளியுள்ளார். வலப்பக்கத்திலேதான் காலசம்மாரத் திருவுருவம் உள்ளது.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

**கடவுள் இவ்வுலகம் எங்கும் நிறைந்துள்ள பொருள்**

# புலமை விஞவிடை

விடையிறுத்தவர் :

வித்துவான் சுபபையபிள்ளை அவர்கள்

1. புலவர் என்பவர் யாவர்?

கல்வி கேள்விகளால் அறிவில் மேம்பட்ட சான்ஞேர்.

2. புலவர் எத்தனை வகையினர்?

புலமையுள்ளவர் கவி, கமகன், வாதி, வாக்கி என நால்வகையினர்.

3. கவி என்பவர் எத்தகையவர்?

கவிஞர் எனவும் வழங்கும் இவர்கள் புதியதாகச் செய்யுள் புனைந்து இயற்றவல்லவர்.

4. கவிகள் எத்தனை வகையினர்?

கவி என்பார் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என நால்வகைப்படுவர்.

5. கமகன் என்போர் யாவர்?

ஒருவர் சொல்லிய நூலினை அல்லது செய்யுளைத் தாம் பயிலாதிருந்தும் நுண் மதியால் அல்லது கல்வி கேள்வி யாற்றலினுல் அந்த நூலின் மெய்ப்பொருளை உரைக்கவல்லவர்.

6. வாதி என்பவர் யாவர்?

தாம் நிலைநாட்ட எடுத்துக்கொண்ட மேற்கோளினை ஏது, உதாரணம் என்பன காட்டித் தாபித்து எதிர் வாதஞ் செய்வோரையும் வெல்லவல்லவராவர்.

7. வாக்கி எனப் பெயர்பெற்றவர் யாவர்?

தாம் விரித்துப் பேசலுற்ற பொருளைக் கேட்போர் யாவருக்கும் விளங்கும் வண்ணம் பிரசங்கிக்க வல்ல புலமையுள்ளவராவர்.

8. ஆசுகவி என்பவர் யாவர்?

இவ்வெழுத்தாலே பாடுக. இச்சொல்லாலே பாடுக. இப்பொருள்பற்றிப் பாடுக. இவ்வியாப்பிலே பாடுக. இவ்வலங்காரம் பொருந்தப் பாடுக. என ஒருவர் கூறியவுடன் அவரெதிரிலே உடனே பாடி முடிக்கக் கூடியவர்.

9. மதுரகவி என்பவர் யாவர்?


ஓசையும் பொருளும் இனிய வாய் ழுழுவதுஞ் செஞ் சொல்லாய், அலங்காரமும் பொருளும் புலப்படக் கேட்டோர் மெச்சும் வண்ணம் பாடுந் தகைமை உள்ளவர்.

10. சித்திரகவி என்பவர் யாவர்?

மாலைமாற்று, சக்கரபந்தம், ஏகபாதம், எழுதுற் றிருக்கை, விஞவுத்தரம் முதலிய விசித்திரங்கள் அமையும்படி எழுத்துக் குற்றம், சந்தக் குற்றம் முதலியவையின்றிப் பாடவல்லவர்.

11. வித்தாரகவி என்பவர் யாவர்?

பல செய்யுள்கள் தொடர்ந்துவரும் தொடர்நிலைச் செய்யுள் அல்லது நீளமான தனிப்பாச் செய்யுள் ஆகியவற்றைப் பாடவல்லவர். ★



## சோல்பரிப்பிரபு கண்ட யாழ்நகர்ச்சுவாமி

முந்திய பாடத்திற் சொன்னவண்ணம் சற்குரு நிலையை அடைந்த மகான்கள் மிகவும் அருமையாக இருப்பர். ஆனுல் உண்மையை உணர்ந்த ஆத்மன் ஒருவர் இலங்கையின் வடபால் உள்ள யாழ்ப்பாணத்திலே தொண்ணூறாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து. அண்மையில் 1964ஆம் ஆண்டு [illegible] தேகத்தை நீத்தவராவர்.

நற்சி[illegible]னை என்னும் பெருநூலின் உட்பொருளாயுள்ளன யாவும் அம்மகான் அருளிச்செய்த பாடல்களும் உபதேசங்களுமாம். இவையாவும் அவர்தம் திருவாயிலிருந்து தாமாகவே மலர்ந்தபோது, இவற்றை அவருக்கு அருகில் இருந்தவர் யாரேனும் எழுதியனவும், அன்றேல் சுவாமிகள் தாமாகவே எழுதியனவுமாகும். இவற்றில் அறிவாற்றல் சார்ந்த எவ்விதச் செயற்பாங்கும் இடம் பெறவில்லை. அவர் தெய்வத்தின் குரலாய் இருந்தார் என்பதே அமைவுடையதாகும்.

இத்தகைய திருப்பாடல்களை வேறு மொழிகளில் மொழி பெயர்ப்பதாயின், மொழி பெயர்ப்பவரும் இவரின் பெரு நிலையைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது இன்றியமையாததாகும். அன்றேல் இவற்றை மொழிபெயர்க்கும் போது இவற்றிலுள்ள ஆற்றல், அழகு, மதிநுட்பம் என்பனவற்றை இழந்து விடவேண்டியிருக்கும். ஆனுல் செவியுள்ளவர்கள் கேட்கட்டும் என்னும் சிந்தனையினுல் இவ்வரிய திருப்பாடல்களில் ஏதாவது ஒரு பகுதியையாவது அறிந்து பயனடைய வேண்டும் என்பதனுல் இவற்றை மொழி பெயர்க்கும் பணி மேற்கொள்ளப் பெற்றது.

இப் புத்தகத்துள் பொதிந்துள்ளவை தாமே வாய் திறந்து பேசட்டும். இவற்றுக்கு உரைகள், உரை விளக்கங்கள் எழுதப்பட்டால், அவை வழிகாட்டுவதற்கு எதிர் மாருய் வழியைப் பிழையாகக் காண்பிக்கலாம் எனக் கருதப்பட்டது. அன்றி மூலபாடங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு ஆழமுள்ளனவோ அவ்வளவுக்கு இத்தகைய ஆபத்துக்கள் உண்டாகலாம் ஏனெனில் உரைகாரர் எவரும் தத்தமது நிலையில் தத்தமது அறிவாற்றலின் அளவுக்குத் தக்கதாகவே விளக்க முற்படுவாராதலால் என்க.

ஆனுல் ஆழமான ஞானத்தைக் கூறும் அருளிப்பாடுகள் வெவ்வேறு படி நிலைகளில் வெவ்வேறு தரங்களில் விளங்கப்படலாம். அவற்றுட் சில ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டனவாகவும் தோன்றலாம். இங்ஙனம் முரண்பட்டுத் தோன்றும் நிலையிலேதான் உண்மையை உள்ளபடி கூறவும் முடியலாம். எனவே ஒவ்வொரு வாசகனும் தன் தன்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

★ மனத்தை அடக்கியவன் யோகியாகிருன் ★

# ★ மாதர் பகுதி ★

காார்க்கி, மைத்ரேயி முதலிய உபநிடதகாலப் பெண்கள் பெரிய படிப்பாளிகளாய் இருந்தார்கள். வேதங்களை நன்கு விளங்கிய வேதாந்திகள் அவர்கள். சீதை, தமயந்தி, திரௌபதி, அநசூயை, சுகன்யா, அருந்ததி முதலானோர் கற்பரசிகளாய்க் கணவனுக்குப் பணிவிடை செய்து பெரியவர்களாயிருந்தனர். திரௌபதி கேட்ட கேள்விகளுக்கு விடைகூறுவது கடினம் என்று பீஷ்மாசாரியாரேகூறினார். இவர்கள் எந்தச் சர்வகலாசாலையிலும் பட்டப் படிப்புப் படித்து விவேக முறுக்கேறவில்லை. தாய் தந்தையரிடமும், மாமன் மாமியரிடமும் கற்ற பாடமே இவர்களை உத்தமர்களாக்கியது. அவர்கள் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டே கல்விக்குக் காது கொடுத்துக் கேள்வி ஞானத்தால் உயர்ந்தனர்.

பாண்டிமாதேவி, புனிதவதி, திலகவதி முதலானோர் பெரியபுராணப் பெண்டிர் எனப் போற்றப் பெறும் அளவுக்கு உயர்ந்தவர்கள். எல்லோராலும் வணங்கப்பெறும் அளவுக்குத் தெய்வாம்சம் பெற்றவர்கள்.

சங்கராச்சாரியருக்கும், மண்டனமிச்ரருக்கும் மிகக் கடுமையாக நடந்த சாஸ்திரவாதப் பிரதிவாதத்துக்கு மத்தியஸ்த்தம் வகித்தவள் ஒரு பெண். அவள் ஒரு மூலையிலமர்ந்து தன் நாளாந்தக் கடமைகளைச் செய்து கொண்டே வாதப்பிரதிவாதத்தைச் செவிமடுத்துத் தீர்ப்புக் கூறினாள். அறிவும் நேர்மையும் உள்ள அவளை இன்றுந்தான் பண்டித உலகம் போற்றுகிறது.

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

## குமரிமுதல்.......

### அன்னை அபிராமி

அபிராமியந்தாதி என்னும் அருமையான பிரபந்தம் வழிபாட்டு நூலாயும் உள்ளது. திருக்கடவூர் வெளிப் பிராகாரத்தில் கிழக்கு நோக்கியுள்ள சந்நிதி அபிராமித் தாயாரின் அருள்கொளிக்கும் கோயிலாகும். அன்னையிடம் அசையாத பக்திகொண்ட பட்டர் ஒருவர் பக்தியில் முதிர்ந்து பைத்தியமாயே விட்டார். அவர் அபிராமியைத் தியானித்துப் பூரணமான பொலிவைக் கண்டவேளையில் சரபோஜி மன்னன் அவரிடம் அமாவாசை எத்தனை நாழிகையில் என்று கேட்டான். ஆனால் பட்டருக்கு எங்கும் பூரணமாகவே இருந்ததால் அவர் அடுத்துவருவது பூரணை என்றே கூறிவிட்டார். அவர் வாயிலாக அபிராமி அந்தாதி வெளிவந்ததும், அதற்குகந்த அபிராமித் தாயார் தமது தோட்டினைச் சந்திரனாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்ததும் நாமறிந்தனவே. திருக்கடவூர் அன்னை அபிராமியின் திருவுருவம் மிகவும் அழகானது. அமைதியானது அன்னை வடிவான அற்புதமானது.

### தீர்த்த மகிமை

திருக்கடவூர் மயானத்துத் தீர்த்த மகிமை பெரிது. இங்குள்ள காசி தீர்த்தம் என்னும் திருக்குளத்திலிருந்தே திருக்கடவூருக்கும் தீர்த்தம் கொண்டு போகிறார்கள். பங்குனி மாதந்தோறும் சுக்கிலபட்சத்து அசுவதி நாளில் இங்கே தீர்த்தமாடுவதைப் புண்ணியம் எனக் கருதுவர்.

### தேவாரம்

இத்தலத்துக்கு மூவர் தேவாரங்களும் உண்டு. இங்கே முற்காலத்தில் ஸ்ரீருத்திரம் ஒழுங்காக ஓதப்பட்டு வந்ததென்பர். இப்பகுதியில் உள்ள திருத்தொண்டத்தொகை மங்கலம், சிவபாத சேகர மங்கலம், திருநீற்றுச் சோழ மங்கலம் முதலிய திருப்பெயர்கள் சைவசமயம் இங்கே மகோன்னத நிலையில் இருந்தமையைக் குறிப்பனவாகும்.

### நாயன்மார்கள்

திருக்கடவூரிலே தோன்றிய குங்கிலியக்கலயநாயனாரும் காரி நாயனாரும் பல சிவதொண்டுகள் செய்தவர்கள். குங்கிலியக்கலயனார் வறுமையுள்ளபோது திருக்கோயிலில் குங்குலியத்தூபம் இடுஞ் சரியை கிரியைத் தொண்டினைத் தவறாமல் மனைவியாரின் தாலியை விற்றுத் தொண்டு செய்தவர். அவர் கட்டிய திருமடத்திலே சம்பந்த சுவாமிகளும் அப்பர் சுவாமிகளும் கூடியிருந்தவர்கள்.

## குமரிமுதல் காஞ்சிவரை

### திருக்கடவூர் மயானம்

திருக்கடவூர் என்னும் திருப்பதிக்கு அண்மையில் உள்ளது திருக்கடவூர் மயானம் என்னும் திருப்பதியாகும். முன்னர் சிவபெருமான் பிரமதேவரைக் கற்பாந்த காலத்தில் எரித்துப் பின் புதுக்கற்பகாலத்தில் அவரை எழுப்பிப் படைப்புத் தொழிலைக் கொடுத்த இடமாகையால் இது மயானம் எனப் பெயர்பெற்றது.

இங்கே கோயில் கொண்டருளிய இறைவன் திருநாமம் பெரிய பெருமான் அடிகள். இவருக்குப் பிரம்மபுரீசர் என்றும் திருநாமம் உண்டு. இறைவியாரின் திருநாமம் மலர்க்குழல் மின்னம்மை என்பதாகும். ★

## 1978 மாசி மாத நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 1. | புதன் | — தாயுமானசுவாமிகள் தினம். |
| 3. | வியாழன் | — ஏகாதசி |
| 4. | சனி | — சுதந்திரதினம் |
| 5. | ஞாயிறு | — பிரதோஷம் |
| | | — அறிஞர் சித்திலெப்பை நினைவு |
| 7. | செவ்வாய் | — அமாவாசை |
| 13. | திங்கள் | — முன்னேஸ்வரம் கொடி |
| 15. | புதன் | — கார்த்திகை விரதம் |
| 17. | வெள்ளி | — கச்சியப்பசிவாசாரியார் குருபூசை |
| 18. | சனி | — ஏகாதசி |
| 20. | திங்கள் | — பிரதோஷம் |
| | | — நபிகள்நாயகம் பிறந்த தினம் |
| 21. | செவ்வாய் | — நடேசர் அபிஷேகம் |
| 22. | புதன் | — மாசி மகம் பூரணை |
| | | — நகுலேஸ்வரம் கொடி |
| 25. | சனி | — உத்தரம், திருவள்ளுவர் பூசை |

★ நல்லனவற்றை நல்குவதே நல்லறிவு ★

ஓம் என்றும் ஓம்காரம் என்றும் பிரணவம் என்றும் வழங்கும் உண்மைப் பொருள் பரப்பிரம வடிவானது. மூச்சையடக்கித் தியானிக்க வேண்டியது. அதற்கு மேற்பட்ட சாதனை வேறெதுவுமில்லை அது மூன்று வேதங்களையும் உணர்ந்த பலனைத்தருவது. தினமும் ஆயிரம் முறை அதனை ஒரு மாத காலம் சொன்ன மாத்திரையில் பாவங்கள் தேயும். காயத்திரி மோட்ச சாதனத்தில் பிரணவம் இடம்பெறுகிறது. அது சத்தியமாய் உள்ளது. அதன் அட்சரம் அழிவற்றது என்பது வேதவாக்கு. அதனை உச்சரித்தல் வேள்விகள், யாகங்கள், தானங்கள், தருமங்கள் சர்தானங்கள் யாவற்றிலும் மேலானது. மானசீகமாக உச்சரிப்பதே மிகமிக மேலானது.

பொறிகள் ஐந்து, புலன்கள் ஐந்து என்பனவற்றைக் கண்டபடி ஏவி நடத்தும் மனம் மிகவும் பொல்லாதது. மனக் குதிரையை அடக்குதல் மகாகடினம். அதை அடக்க வல்லமையுள்ள அதிசய சாதனம் பிரணவ நாம உச்சாரணம். அதனைக் காலை மாலை ஆகிய இருவேளைகளிலும் செய்தல் மேலான தவமாகும்.

## உபநிடத மகா வாக்கியங்கள்

பகவான், மகான், சமர்த்தர், மனதைத் தூண்டுபவர், நிர்மலமான பதத்தைத் தருபவர், சுத்தர், அழிவற்றவர் பூரணர், எல்லோர் மனதிலும் இருப்பவர்.

எல்லா இந்திரியங்களையும் பிரகாசப்படுத்துபவர் தாம் இந்திரியமில்லாதவர். இந்திரியங்களால் கண்டறிய முடியாதவர்.

அணுவிலும் சிறியவர் பெரியதிற் பெரியவர். எல்லாவற்றுக்கும் உயிரானவர். சோகம் மோகம் அற்றவர்கள் அவர் அருளால் அவரை அறியக்கூடும்.

அவர் ஒருவர் உலகுக்கு ஆதியாயும் நடுவாயும் கடையாயும் இருப்பவர்.

இரண்டு பறவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ஒரு மரத்தில் இருக்கின்றன. ஒன்று மரத்தின் காய் கனிகளை உண்கின்றது. மற்றொன்று உண்ணாமல் பார்த்துக்கொண்டிருக்கிறது.

தேவர்களைப் படைத்து அவர்களுக்கு சக்தியைத்தந்து, உலகத்தைக் காக்கின்ற உருத்திரமூர்த்தியும் சர்வக்ஞரும் இரண்யகர்ப்பனை முதலிற் படைத்தவருமான பகவான் நமக்கு நற்புத்தியைப் புகட்டட்டும்.

மாயையில் மூழ்கி ஒன்றையும் அறியாதிருக்கும் இந்தப் பிரபஞ்சத்தில் சூட்சுமமாக இருப்பவரும் பிரபஞ்சத்தை மூடிக்கொண்டிருப்பவருமான சிவனை அறிந்தவனே முத்தி பெறுகிறான்.

— சிவேதாச்வதரம்

## ஒளிபரப்பும் கீதை

கிழக்கில் உதயமான பகவத்கீதை இப்பொழுது மேற்கில் ஒளிபரப்புகிறது. இறைவனின் கீதம் என்னும் பொருளில் இதனை *Song of God* என்று போற்றுகிறார்கள். பகவத்கீதைக்குப் பல மொழிபெயர்ப்புகள் அங்கே உள்ளன. அமெரிக்கர்களுள் விட்வேர்த் என்பவர் ஒருவர் ஒரு பெரிய சர்வகலாசாலையையே அமைத்தவர். ஏழு வயது முதல் பாரதநாட்டுத் தொடர்பில் பகவத் கீதையைப் படித்துவருபவர். கீதையில் ஆராய்ச்சி செய்தவரான திருமதி விட்வேர்த் தமது குழந்தைப்பருவம் முதல் கீதையைக் கேட்டு மகிழ்ந்தவர். கடமையைச் செய் என்பதை வெகுவாக விரும்புபவர். இவர்கள் இருவரும் சேர்ந்து பதித்துள்ள கீதைக்குப் பெரிய வரவேற்பு நிலவுகிறது. ★

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## மாசி மாதத்தின் மகத்துவம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மாசி மாதத்தின் மகத்துவங்களில் மக நட்சத்திரமும் சிவராத்திரி விசேடமும் முக்கியமானவை. மகத்தோடு கூடிய பூரணை மாசம் மாசி எனப்படுகிறது. மக நட்சத்திரத்துக்கு கொடுநுகம், வேள்வி, வாய்க்கால், வேட்டுவன் முதலிய பெயர்கள் உண்டு. வேள்வி என்பதைத் தமிழில் மகம் என்பர். மகத்தையுடையது மாகி எனப் பெயர் பெற்று மாசி எனத் திரிந்தது.

பூரணை நாளில் கடலாடுதல் தமிழர் வழக்கம். அதிலும் மாசிக் கடலாடுதல் மிகவும் நல்லதென்பர். மாமாங்கமாடி மாசிக்கடலாடி எனவரும் நாட்டார் தாலாட்டுப் பாடலில் பொதுமக்கள் மாசிக்கடலாடுதலைப் பெருவழக்காகக்கொண்டமை புலனாகிறது. தீர்த்தமாடுதலால் உடல் மாசு நீங்குவதோடு உள்ளத்தின் மாசும் நீங்குவதாகும். தீர்த்தம் புறத்தூய்மைக்கும் அகத்தூய்மைக்கும் விதிக்கப்பட்டுள்ளது. தீர்த்தத்தைத் தீர்த்த நீர் என்றே பெரியோர் சிறப்பித்துள்ளனர். ''அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய் - அருள்நோக்கில் தீர்த்த நீர் ஆட்டிக் கொண்டாய்'' என்று திருநாவுக்கரசு நாயனார் அருளியுள்ளார். மாணிக்கவாசகசுவாமிகளும் ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆடும் தீர்த்தன் என்று இறைவனையே தீர்த்தமாக அருளியுள்ளார்.

தீர்த்தத் திருவிழாக்களில் ஆண்டுதோறும் வருகின்ற மாசி மகத் தீர்த்தமும், பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை வருகின்ற மகா மகத் திருவிழாவும் சிறந்தவையாகும். வட - இந்தியாவில் மகாமகத்திருவிழாவில் கோடிக்கணக்கானோர் புனித நீராடி மகிழ்வர்.

மாசி மகநாள் இறைவனுக்குக் கடலாட்டு விழாவாக அமைந்துள்ளது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் காலத்தில் அவ்விழா பெருஞ் சிறப்பாக நடைபெற்றுவந்தது.

மடலார்ந்த தெங்கின் மயிலைஆர் மாசிக்<br>
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்<br>
அடல்ஆனே றூரும் அடிகள் அடிபரவி<br>
நடம் ஆடல்காணுதே போதியோ பூம்பாவாய்.

★ வீண்வியயஞ் செய்பவனைத் திருமகள் நோக்காள் ★



## சிவானந்த ★★★★★★★★★★★★★ சிலம் ★★★★★★★

1. காமம் மிகுந்தவன் குருடருள் குருடன்
2. சிந்தனையுள்ளவனே மனிதருள் மனிதன்
3. தெய்விக வாழ்வே உண்மையான பண்பாடு
4. விநயம் உள்ளவரை எல்லோரும் விசுவாசிப்பர்
5. வேண்டாத விவாதங்கள் விபரீத வேலையாகும்
6. குருவை மிஞ்சிய ஆதாரம் உலகில் இல்லை
7. செபம் செய்வதால் மனமாசுகள் நீங்கும்
8. மௌனம் என்பது சஞ்சலந் தீர்க்கும் சஞ்சீவி
9. மகிழ்ச்சியுள்ளவன் ஞானியிலும் பெரியவன்
10. தியாக சிந்தையுள்ளவன் மனத்தை அடக்கமுடியும்

நீ எதைச் செய்தாலும், எதை உண்டாலும், எதைத் தியாகஞ் செய்தாலும், எதைக் கொடுத்தாலும், உன்னை மேலடையச் செய்யும் எந்த முயற்சியைச் செய்தாலும் அதைக் கடவுளுக்கே அர்ப்பணம் என்று செய். அதன் பலனை நீ அடைந்து வாழ்வாய். ★

## மநுதர்மம்

ஆகாரம் உண்ணும்போது கிழக்கு நோக்கில் ஆயுள், தெற்கு புகழ், மேற்கு செல்வம், வடக்கு சத்தியம் உண்டாகும்.

ஆகாரம் செய்யுமுன் ஆசமனம் செய்தல் வேண்டும். அது சுத்திகரிப்பு. அன்னத்தைச் சுற்றி நீர் ஒழுகவிடுதல் பிரிசேஷனம் எனப்படும். உண்டபின் ஆசமனஞ் செய்து, கண் காது மூக்கு சுத்தஞ்செய்தல் வேண்டும்.

சோற்றை வணங்கிச் சுவைத்து மகிழ்ந்து உண்பதால் துணிவும் வலிமையும் உண்டாகும்.

எச்சிற்கையுடன் எவரையும் எதிர்சென்று காணுதலாகாது, உணவின் இடையில் எழுந்து போதலாகாது.

பெருமளவில் உண்டால் நோய், ஆயுட்குறைவு, புண்ணியக்குறைவு, உலோகநிந்தனை உண்டாகும்.

பெண்கள் இல்லறத்தைப் பேணுதல் சமிதாதானம் எனப்படும்.


## அருந்தருணம்! அரிய தென்னம்பிள்ளை!

நல்ல இனத்துத் தென்னம்பிள்ளை: அதிலும் செவ்விளநீர். விரைவிற் கட்டையாய் நின்று காய்ப்பது. உடனடியாக விற்பனைக்கு உண்டு. கொள்விலைக்கே விநியோகிக்கிறோம்.

காங்கேயன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

மில்க்வைற்
தபாற்பெட்டி 77
யாழ்ப்பாணம்.


## உங்களுக்குத் தெரியுமா?

1. மூளைக்கு இரத்தம் ஓடாவிட்டால் என்ன வரும்?
2. பொன் எந்த உலோகத்தைச் சேர்ந்தது?
3. பைபிள் முதலில் மொழி பெயர்க்கப்பட்ட மொழிகள்
4. ஓராண்டில் நிகழும் கிரகணங்களின் தொகை.
5. கங்கை நதியிற் கலக்கும் வேறு நதிகள்.
6. வயிறு பேதிக்கும் உப்பின் பெயர்.
7. நாக்கு வீங்குவது எந்நோய் காரணமாக.
8. துருவப் பகுதியின் பிரதான ஏற்றுமதி.
9. சமரேகைக்கு நேராகச் சூரியன் தோன்றும் மாதங்கள்
10. பிடரி மயிருள்ள எருதுகள் காணப்படும் இடம்.
11. உதை பந்தின் சராசரி நிறை.
12. முட்டை அவிய எவ்வளவு நேரமாகும்.
13. தண்ணீரின் கொதிநிலை என்ன.
14. இஸ்லாம் மதம் முதலில் பரவிய நாடு.
15. நிலக்கரியின் சிறந்த இனம்.
16. யப்பானில் நெசவுக்குப் பெயர்போன இடம்.
17. வட இலங்கையில் பெரிய தனியார் தொழிற்சாலை.
18. மில்க்வைற் உதயமாகி எத்தனையாண்டுகள் ஆயின.
19. ஒரு மனிதனுக்கு எவ்வளவு சுத்தமான காற்றுத்தேவை
20. கிறிக்கற் ஸ்ரம்ஸ் நிலத்திலிருந்து எவ்வளவு உயரம்.

## தெரியுமே!

1. மயக்கம் 2. செம்பு 3. லத்தீன், கிறீக் 4. ஏழு
5. யமுனை, பிரமபுத்திரா 6. எப்சம் 7. குடல் நோய்
8. மீன் 9. பங்குனி, புரட்டாதி 10. கனடா
11. பதினான்கு அவுன்ஸ் 12. நான்கு நிமிடம்
13. (100·C, 212·F 14. அராபியா 15. அந்திருசைட்
16. ஓசாகா 17. மில்க்வைற் தொழிலகம் 18. ஐம்பது
19. நிமிடத்துக்கு 50 கனஅடி 20. இருபத்தேழு அங்குலம்

### இராதாகிருஷ்ணன் கண்ட
## இந்துதருமம்

உலகம் தோன்றிய காலத்தை அடுத்துப் பிறந்த தருமம் இந்து தருமம். இது உலகின் பல பாகங்களிலும் இன்றும் வியாபித்து உள்ளது. பேசா அநுபூதி என்னும் அநுபவஞானம் பிறந்ததும் சமயபேதங்கள் மறைந்துவிடும். எல்லையில்லாத சுயம்புவுக்கு எந்த உருவும் ஒன்றே. இந்த உண்மை இந்து தர்மத்தில் அடங்கும். மனிதனின் நம்பிக்கையை விட நடத்தையே பெரிது. இந்துதர்மத்தில் ஆரிய திராவிட கலாச்சாரங்கள் உள்ளன. இறைவனை ஆரியன் தமிழன் என்பது. இந்துதர்மம் பெயர் வித்தியாசத்தைப் பொருட்படுத்துவதில்லை. எவரும் தம் தனித்தன்மையையும் ஆர்வத்தையும் தவிர்க்கவேண்டிய நிலை இந்து தர்மத்தில் இல்லை. உயர்ந்த இலட்சியத்தையும் பரிசுத்தமான வழிபாட்டையும் இந்து தருமம் ஏற்றுக்கொள்கிறது. இந்து தர்மம் மனித உரிமையை மறுப்பதுமில்லை மறைப்பதும் இல்லை. மனிதனின் சிந்தனையும் சத்தியஞானமும் விரிவடைவதையே இந்து சமயம் விரும்புகிறது.

★ ஒருமுகப்பட்ட மனம் பேராற்றல் பெறுகிறது ★

## சிவராத்திரியும் சிவலிங்கமும்

திருச்சிற்றம்பலம்

காரொளிய திருமேனிச் செங்கண் மாலும்
 கடிக்கமலத் திருந்தவனும் காணா வண்ணம்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
 திகழொழியைச் சிந்தைதனை மயக்கம் தீர்க்கும்
ஏரொளியை இரு நிலனும் விசும்பும் விண்ணும்
 ஏழுலகும் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
 பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

திருநாவுக்கரசு நாயனார் சிவப்பிழம்பைச் சிந்தை செய்தவாறே மாணிக்கவாசக சுவாமிகளும் அதன் பெருமையையும் ஆதியந்தத்தையும் கூற முடியாது என்று போற்றுகிறார். பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாத மலர் போதார் புனைமுடிவும் எல்லாப் பொருள் முடிவே என்பர்.

மாலும் அயனும் அடிமுடி தேடி அறியாத மூல இலிங்கமாய் ஒளியான திருமேனியனாய் இறைவன் காட்சி கொடுத்த காலமே சிவராத்திரி வேளையாகும். தீப்பிழம்பு லிங்கவடிவாக இருக்கிறது. அது சோதியுட்சோதி, பரஞ்சுடர். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர் ஆகிய எட்டிலும் இறைவன் வியாபித்திருத்தலால் சிவபெருமானை அட்டமூர்த்தி என்பர். நிலம் முதலிய எட்டின் சேர்க்கையாலாகிய இவ்வுலகம் ஒரு சிவலிங்கமாகும். இலிங்கமதாக எடுத்ததுலகே என்பர் திருமூலர்.

சிவலிங்கம் சிவபெருமானுக்குரிய அருவுருவத் திருமேனி. அது அருவமாயும் உருவமாயும் உள்ளதால் அருவுருவம் எனப்பெயர் பெற்றது. அருவுருவத் திருமேனி ஒளிப்பிழம்பாய் உள்ளது. இப்பிழம்பிலிருந்து வேறு உருவத் திருமேனிகள் தோன்றலாம். அத்திருமேனிகள் யாவுக்கும் இதுவே மூலமானது. எனவேதான் திருக்கோயில்களில் மூலத்தானத்தில் சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்கிறார்கள். மற்றைய மூர்த்திகள் யாவும் சிவலிங்கத்தைச் சூழவுள்ள பரிவார மூர்த்திகளாகும்.

சிவலிங்க மூர்த்தத்தைச் சதாசிவ மூர்த்தம் என்பர். அதிலிருந்து பல்வேறு மூர்த்தங்கள் உருவாகும். அவை மகேசுரமூர்த்தங்கள் எனப்பெறும். அவை இருபத்தைந்து வகைப்படும் என்பர். சதாசிவ மூர்த்திக்கு உருவம் கூறும்போது ஐந்து திருமுகம், பத்துத் திருக்கரம் என்று வகுப்பர். அவை படைத்தல், முதலிய பஞ்ச கிருத்தியங்களைக் குறிப்பதற்காகவேயாகும். ★

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

**சோல்பரி கண்ட........**

இயல்பாற்றலுக்குத் தக்கதாகத்தான் விளங்கிக்கொள்ளும் அளவில் இவற்றில் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

என்றாலும் நற்சிந்தனை என்னும் இந் நூலில் வந்துள்ளது அருளிப்பாடுகளின் பின்னணிகளைப் பற்றியோ, சந்தர்ப்பங்களைப் பற்றியோ பழக்கமில்லாதவர்களின் நன்மைக்காக இங்கே சில விளக்கவுரைகள் வேண்டப்படுகின்றன. எனினும் அவை மிகவும் சுருக்கமாக அறிவுக்குப் புலனாகின்ற அளவிலே அமைவனவாகும். ★

## வழக்கிலுள்ள வடமொழிகள்

| | | |
|---|---|---|
| சகசம் | — | இயற்கை |
| சகடம் | — | வண்டி |
| சகலம் | — | எல்லாம் |
| சகவாசம் | — | சேர்க்கை, நட்பு |
| சகாயம் | — | உதவி |
| சகிதம் | — | உடன் |
| சகித்தல் | — | பொறுத்தல் |
| சகுனம் | — | குறி |
| சகோதரம் | — | உடன்பிறப்பு |
| சக்கரம் | — | உருளை, வட்டம் |
| சக்கரவர்த்தி | — | பேரரசன் |
| சக்தி | — | ஆற்றல் |
| சங்கம் | — | கூட்டம் |
| சங்கற்பம் | — | நினைப்பின் அளவு |
| சங்காரம் | — | அழிவு |
| சங்கீதம் | — | இசை |
| சஞ்சலம் | — | துன்பம், கவலை |
| சடம் | — | உடல் |
| சஷ்டி | — | ஆறு |
| சண்டாளி | — | தீயவள் |

## மாணவ மாணவியருக்கு

புத்தாண்டில் புதுவகுப்பில் இடம்பிடித்துள்ளீர். பாடசாலை கலைமகளின் திருக்கோயில். பள்ளித்தலம் அனைத்தும் கோயில். ஆசிரியர் தெய்வம். எழுத்தறிவித்தவன் இறைவனாவன். கல்வியில் உங்கள்கருத்தை இறக்குங்கள். அரசியலில் கவனம் செலுத்தாதீர் கட்டுப்பாடு, ஒழுக்கம், நேர்மை முதலிய உயர் குணங்களைப் பயிற்றும் நூல்களைப் பயிலுங்கள். யப்பானியரின் தீவிர முன்னேற்றத்துக்குக் காரணம் சுறுசுறுப்பும் கடின உழைப்புமேயாம்.

"The future belongs to the young. It is a young and new world which is now under progress of development and it is the young who must create it. But it is also a world of truth, courage, justice, lofty aspiration and straight forward fulfilment which we seek to create."

— *Sri Aurobindo*

## கேனோபநிஷதம்

ஆத்மாவின் சக்தியானது காதுக்குக் காதாகவும், மனதுக்கு மனதாகவும், வாக்குக்கு வாக்காகவும், பிராணனுக்குப் பிராணனாகவும், கண்ணுக்குக் கண்ணாகவும் உளது. பேரறிஞர் இந்தப் பொறியுலகைத் தாண்டி அமிர்த சொரூபமாகின்றனர்.

## மில்க்வைற் தொழிலதிபரின் சமயப்பணி

மில்க் வைற் தொழிலதிபர் சைவசமயப் பற்றுள்ளவர். சைவசமயக் குரவர் நால்வரிடமும் நிரம்பிய பற்றுள்ளவர். திருமுறைகளில் பக்தியும், அன்பும் கொண்டவர். சந்தியாவந்தனம், அநுட்டானம், பிராணுயாமம், தியானம் இவற்றில் அசையாத நம்பிக்கையுள்ளவர். தீட்சை, திருநீறு, உருத்திராக்கத்தை விரும்புவர். தம்மைப் போலச் சைவ சமயத்தவரும் ஒழுகுதல் வேண்டும் என்று கருதுபவர். பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா, வித்துவான் சுப்பையபிள்ளை அவர்கள், பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள், பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள், கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் எழுதிய தொகுத்த சைவசமய நூல்களை ஆயிரக்கணக்காக அச்சிட்டு வழங்கியவர்.

திருவள்ளுவர், காந்தியடிகள், சிவானந்தர் முதலான பெரியார்களின் பொன்மொழிகளைக் கால[illegible]தோறும் அச்சிட்டுப் பரப்பியுள்ளார். சுவாமி சுத்தான[illegible] பாரதியார், அரவிந்தமகான் முதலானோரின் மணிவார்[illegible]களையும், யோகசுவாமிகளின் குருவாசகங்களையும் அ[illegible] பரப்பியுள்ளார். ஆறுமுகநாவலரவர்களின் பாலபாட[illegible]ங்களை அச்சிட்டு எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்துள்ளார். குழந்தைகள் ஏடு தொடங்கும்போது உபயோகமாகும்வண்ணம் பனையோலையில் நவீனமாக அச்சுப் பொறித்த உயிர்மெய் எழுத்துக்கள்கொண்டு ஏடுகளை ஆயிரக்கணக்கில் ஆண்டுதோறும் உபகரித்துவருகிறுர்.

தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, அபிராமியந்தாதி முதலிய நூல்களிலிருந்து பாடல்கள் பலவற்றை வர்ணத்தகடுகளில் சித்திர வேலைப்பாட்டுடன் எழுதுவித்துக் கோயிற் சுவர்களிலும் மண்டபத் தூண்களிலும் பதித்துள்ளார்கள். நின்றும் இருந்தும் எங்கும் தெய்விகப் பாடல்களைப் படிக்கவும், பாடமாக்கவும், நினைக்கவும் இவை நல்விருந்தாய் வசதியாய் உள்ளன.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று காஞ்சிப் பெரியார் கூறிய வாக்கியத்தை வர்ணத்துணியில் எழுதுவித்துத் திருக்கோபுரத்தையும் வரைவித்துப் புனிதமான இடங்களில் தொங்கும்வண்ணம் செய்துள்ளார். கோயில்கள் பலவற்றுக்கு வசந்த மண்டபத் திரைச்சீலைகளை வர்ணப் படம் வரைந்து வழங்கியுள்ளார். திருமுறையோதுவோர், பாதயாத்திரை செய்வோருக்குக் குமிழ் தாளங்கள் வேண்டிய இடங்களில் வழங்கியுள்ளார்.

சிறைச்சாலை, வைத்தியசாலை, அநாதரில்லம், மடங்கள் முதலான இடங்களில் நிலையான சமயப்பணிகள் மில்க் வைற் தொழிலதிபரின் சைவப்பணியைக் காட்டி நிற்பன. இவை அவருக்கு மன்றங்கள் ஆதீனங்கள் மகிழ்ந்தளித்த சிவத்தமிழ்ச் செல்வர், சிவநெறிப்புரவலர், சிவதர்மவள்ளல் முதலாய பட்டங்களுக்குச் சான்று பகருகின்றன.

"சிக்கனமே சிறந்த செல்வம்"

சிக்கன சலவைக்கு

மில்க்வைற் பார் சோப்

வாங்கி உபயோகியுங்கள்.




பெரிய பார் சோப்பும், சிறிய பார் சோப்பும்

விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.

### கடல் கடந்த நாட்டினர் கண்ட மில்க் வைற் செய்தி

"உங்கள் பொன்விழாச் சிறப்புமலர் வரப்பெற்றேன். அரிய பெரிய முயற்சியால் உருவாகியுள்ளது. பாராட்டுகிறேன். நன்றி நவிலுகிறேன் — மறைந்து மறந்தபோன பல பழம் பெரும் விஷயங்கள் இளந்தலைமுறையினருக்கு நல்ல ஞாபகமூட்டும்........

S. தில்லையம்பலம் கெலாங் - மலேசியா.

"I am much obliged and thankful to you for ever for the handsome and extra - ordinary Golden Jubilee Souvenir Milk White News. It gives valuable and very useful information and reading material suitable for our people. The editor deserves all praise and all our sincere thanks for collecting and marshalling all the relevant facts and useful reading matter. I am circulating this to any several friends, and they all appreciate and express their thanks to you. Please convey them to the editor......"

**K. Sinnappu**
Kuala Lumpur.

"......அதைக் கண்ணுற்ற நான் பெரிதும் மகிழ்வுற்றேன் ஆழ்ந்து கருத்தூன்றிப் படித்து நெகிழ்ந்து போனேன். படிப்பதோடல்லாமல் குறிப்பெழுதி வைத்துக் கொண்டேன் — The palest ink is stronger than the strongest memory."

S. D. சிவராம் - கோலாலம்பூர்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர்: "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-2-78.